**S.C.No. 257/2022 நாள் 19.09.2025 PW 1 – திரு.சுப்பையா**

Accused present.

(Crl.M.P.No. 10/2025 dated 04.09.2025 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிதரப்பில்)

இறந்துபோன நங்கமுத்துதேவர் மற்றும் அவரது மனைவி தனியாக ஒரு வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். இறந்துபோன பொன்இசக்கி தனியாக மற்றொரு வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். பொன்இசக்கி சகோதரியின் கணவர் மாடசாமியும் எங்கள் ஊரில் மற்றொரு வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அவரது மற்றொரு மகன் ஊமையன் என்ற முருகன் தனியாக குடும்பத்தோடு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர்கள் எல்லோருக்கும் தனித்தனியாக நிலம்கொண்டு விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நானும், பெருமாளும் டீ சொல்லி எங்களுக்கு டீ வந்தது என்றால் டீ போட சொல்லியிருந்தோம். நாங்கள் சொன்ன இருவர் பைக்கில் எவ்வளவு துாரத்தில் வந்தபொழுது பார்த்தோம் என்றால் கிட்டத்தில் வந்தபிறகுதான் பார்த்தோம். பைக்கை கொண்டு வந்து நிறுத்தினார்கள் என்றால் சரிதான். நாங்கள் அவர்களை பார்த்தபோது பைக்கை நிறுத்தும்போதும் அவர்கள் எதிரிகள் என்று பயம் ஏற்பட்டதா என்றால் பயம் ஏற்பட்டது. உடனே நாங்கள் சத்தம் கொடுத்து பொன்இசக்கியையும், நங்கமுத்துதேவரையும் உசார்படுத்தினோமா என்றால் இல்லை. அவர்கள் உள்ளே செல்ல வேண்டுமென்றால் எங்களைத்தாண்டிதான் செல்லவேண்டுமென்றால் நாங்கள் வாசலில் நிற்கவில்லை, ஓரமாக நின்றுகொண்டிருந்தோம். அவர்கள் உள்ளே போகும்போது எங்களை பார்த்தார்களா என்றால் அதை நாங்கள் கவனிக்கவில்லை. எங்களை பார்த்து, தாக்க முயற்சி செய்தார்களா என்றால் போகும்போது தாக்க முயற்சி செய்யவில்லை, வரும்போது தாக்க முயற்சி செய்தார்கள். நாங்கள் மேற்படி கடையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த நிலையில் கடைக்குள் போவதற்குள் வெட்டிவிட்டார்கள் என்றால் சரிதான். முதலில் பொன்இசக்கியை வெட்டி காயப்படுத்துவதற்கு முன்பு நங்கமுத்துதேவரை யாரும் வெட்டவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அவர்களை வெட்டிக்கொண்டிருக்கும்போது நாங்கள் அங்கிருந்த கட்டைகளை எடுத்து தாக்க முயற்சிசெய்தோமா என்றால் இல்லை. வெட்டாதீர்கள், வெட்டாதீர்கள் என்று சத்தம் போட்டோமா என்றால் இல்லை. முதலில் வெட்டும்போதே அவர்கள் எங்களை பார்த்துவிட்டார்களா என்றால் அவர்கள் எங்களை பார்த்தார்களா என்பதை நாங்கள் கவனிக்கவில்லை. நாங்கள் சம்பவத்தை பார்த்தோம். முதலில் வெட்டியவருக்கு சுமார் 4,5 நிமிடங்கள் வெட்டு விழுந்து இருக்கும் என்றால் சுமார் 3 நிமிடங்கள் வெட்டு விழுந்து இருக்கும். அவனை வெட்டிக்கொண்டிருக்கும்போது என் சித்தப்பாவை ஓடி வந்துவிடுங்கள் என்று உஷார்ப்படுத்தினேனா என்றால் அந்த சமயத்தில் கடைக்குள் போகக்கூடிய சூழ்நிலை இல்லை. கடையின் வெளியே நின்று

இருந்த ஆட்கள் சத்தம் போட்டார்களா என்றால் சத்தம் போட்டார்கள். நான் சம்பவம் முடியும் வரை வாசலில்தான் நின்றேன் என்றால் சரிதான். அந்த வாசல் ஒரு பக்கம் கவுண்டர், மற்றொரு பக்கம் புரோட்டா கவுண்டர் இருந்ததால் நடுவில் 4 அடி பாதைதான் இருந்தது என்றால் சரிதான். எல்லா வெட்டும் விழுந்து திரும்ப வரும்போதும் அந்த பாதையில்தான் நின்றோம் என்றால் சரிதான். அவர்கள் எங்களை தாண்டிதான் வெளியே ஓடினார்கள் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் யாரும் எங்களை வெட்டுவதற்கோ, தாக்குவதற்கோ முயற்சி செய்யவில்லை என்றால் நாங்கள் மறிக்கும்போது முயற்சி செய்தார்கள். நாங்கள் மறிக்கும்போது வெட்ட முயற்சி செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஓடும்போதும் வெளியே நின்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் பதறிப்போய் என்னாச்சி உயிர் இருக்கிறதா என்று என் சித்தப்பாவை தூக்கி பார்த்தேன் என்றால் தூக்கி பார்க்கவில்லை. யாரை முதலில் போய் பார்த்தேன் என்றால் வாசலில் நின்று பார்த்தேன், பார்த்தபோதே அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். என்னிடம் செல்போன் இருந்ததா என்றால் இல்லை. என் அண்ணன் பெருமாளிடம் செல்போன் இருந்ததா என்றால் இருந்தது. தெருவில் நின்றவர்கள் எனக்கு எந்த ஊர் என்றும், வெட்டுப்பட்டவர்களுக்கு எந்த ஊர் என்றும் கேட்டார்கள் என்றால் சரிதான். அதற்குபிறகுதான் அங்கு நின்றவர்களுக்கு வெட்டுப்பட்டவர்கள் எந்த ஊரை சார்ந்தவர்கள் என்று தெரியும் என்றால் சரிதான். எனது சொந்தக்காரர்கள் எல்லாம் நாங்கள் நிற்கும்போதே பேய்குளம் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பஜாரில் அன்றையதினம் சந்தை என்பதால் கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். அன்றையதினம் பொன்இசக்கியும், நங்கமுத்துதேவரும் எத்தனை ஆடு வாங்க வந்தார்கள், எவ்வளவு ரூபாய் வைத்திருந்தார்கள் என்றும், 2 பேரில் யார் வைத்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பஜாருக்கு வரவேண்டுமென்றால் ஆட்டுச்சந்தைக்கு செல்லக்கூடிய விலக்கை தாண்டிதான் டீக்கடை உள்ளது என்றால் சரிதான். இறந்துபோனவர்கள் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்தார்களா என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். டீக்கடைக்கு எங்களை டீக்கடைக்கு போவோம் என்று முதலில் கூப்பிட்டது யார் என்றால் சந்தையில் சரியாக ஆடு கிடைக்காததால் 4 பேரும் ஒருமித்தமாக டீக்கடைக்கு செல்லலாம் என்று சென்றோம். டீக்கடைக்கு போகவில்லை என்றால் நேரடியாக ஊருக்கு திரும்பி இருப்போம் என்றால் சரிதான். நங்கமுத்துதேவர், பொன்இசக்கிக்கோ எங்களுக்கோ ஆட்டுமந்தையோ, ஆடு வளர்க்கும் பழக்கமோ கிடையாது என்றாலும், ஆடு வாங்குவதற்காக நாங்களும், இறந்தவர்களும் சேர்ந்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றையதினம் என் சித்தப்பாவும் அவரது மகனும் காலை 7.00 மணிக்கே இனம் தெரியாத நபர்களால் வெட்டுப்பட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. இனம் தெரியாத கும்பல் வந்து வெட்டிவிட்டு போனதாக கடையில் இருந்த உரிமையாளர் மற்றும் பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் சொல்லி போலீசார் 8.00 மணிக்கே சம்பவ இடம் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு இறந்தவர்கள் யார், எந்த ஊர்

என்று தெரியாததால் அங்கிருந்து சடலத்தை தூக்கி போஸ்ட்மார்டம் அறைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. அங்கிருந்து விசாரித்தபிறகு அவர்கள் கொடுத்த தகவலின்பேரில்தான் எங்களுக்கு சம்பவமே தெரியும் என்றால் சரியல்ல. நான் அன்று சம்பவம் நடந்த உடன் அங்கு வந்த போலீசார் கடையின் உரிமையாளரை சாத்தான்குளம் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் நாங்கள் சென்று புகார்கொடுத்து கொண்டிருந்தபோது போலீசார் கூட்டி வந்தார்கள். காவல்நிலையத்தில் நாங்கள் இருந்த சமயத்தில் கடையின் உரிமையாளரும் அங்குதான் இருந்தார் என்றால் முழுநேரமும் இருந்தாரா என்று தெரியாது. நாங்கள் இருந்தவரை இருந்தார். நாங்கள் காவல்நிலையத்திற்கு போவதற்கு முன்பே கடையின் உரிமையாளரிடம் அடையாளம் தெரியாத நபர்களால் அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டதாக புகார் மனு எழுதி வாங்கப்பட்டது என்றால் இல்லை, நாங்கள்தான் புகார் கொடுத்தோம். 2ம் எதிரி சங்கரபாண்டி இந்த வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது கொலை செய்யப்பட்டார் என்றால் கொலை செய்யப்பட்டார், யாரால் கொலை செய்யப்பட்டார் என்று தெரியாது. அந்த வழக்கில் என்னுடைய மகனையும் ஒரு எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என் அண்ணன் பெருமாளின் மகன் பச்சைகண்ணனையும் ஒரு எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். இறந்துபோன நங்கமுத்துதேவர் மகன் முருகனையும் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என் தம்பி நயினார் அவர் மீது சாத்தான்குளத்தில் செல்லத்துரை என்பவரையும், அவரது மகளையும் கொலை செய்த வழக்கு நடந்து வந்தது என்றால் சரிதான். அதில் என் மாமாவை பேய்குளம் பஜாரில்செல்லத்துரை வகையறா வெட்டி கொன்று விட்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் மாமா கொலை வழக்கில் உள்ள எதிரிகளை சந்தேகப்பட்டு பிடித்து வந்தார்கள் என்றால் தெரியாது. நாங்கள் காவல்நிலையம் செல்லும்போது நான், பெருமாள், ஊரில் உள்ள 4,5 பேர்கள் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையம் இருக்கும் இடம் பிரேத பரிசோதனை அறை, தாசில்தார் அலுவலகம் ஆகியவைகள் ஒரே இடத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்தது யார் என்றால் என் அண்ணன். என் அண்ணன் நடந்த சம்பவத்தை பற்றி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார்மனுவை எழுதியது யார் என்றால் ஆய்வாளர் எழுதினார். ஆய்வாளர் புகாரை எழுதி முடிப்பதற்கு சுமார் ஒரு மணி நேரம் ஆகியிருக்கும் என்றால் சரிதான். அந்த ஒரு மணிநேரத்திற்குள் ஊரில் உள்ள மேலும் உறவினர்கள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனக்கும், பெருமாளுக்கும் கையெழுத்து மட்டும் போடுவோம், எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். எழுதப்பட்ட புகாரை நானோ, பெருமாளோ படிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளபடி "முருகன் கையில் இருந்த அரிவாளால் என் அக்காவை தலையை அறுத்துவிட்டு நீ உயிரோடு லாந்த முடியாமாலே என்று ஏசி அரிவாளால் மாறி மாறி வெட்டினார்" என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நீதிமன்றத்தில்

அடையாளம் காட்டிய அரிவாளை காவல்நிலையத்தில் என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை. அன்றையதினம் இரவே எதிரிகளை போலீசார் பிடித்துவிட்டார்கள் என்றால் தெரியாது. நான் அடையாளம் காட்டிய அரிவாளுக்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன பொன்இசக்கி ஒழுங்காக தொழில் செய்து வந்தார் என்றால் அவர் மனநிலை பாதிக்கப்பட்டு ஊரில்தான் இருந்தார், அவரது வேலையை செய்துதான் வந்தார். எதிரிகள் இறந்துபோனவர்களை ஊருக்கு தேடி வந்தது, போனது என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அண்ணன் சொல்லி தெரியும். பெருமாள் 1,2 எதிரிகளை கூப்பிட்டு சண்டைபோட வேண்டாம் என்று சத்தம்போட்ட விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானாவது, பெருமாளாவது இறந்தவர்களை கொஞ்ச நாளுக்கு வெளியே போகவேண்டாம் என்று எச்சரித்தோமா என்றால் சொல்லியிருக்கிறோம். நான் சொன்ன நேரத்தில் டீக்குடிக்க போனதாகவும், எங்களுடன் இறந்தவர்கள் வந்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2 எதிரிகள் வந்ததாகவும், கோழிவால் அரிவாளால் பொன்இசக்கியையும், நங்கமுத்துதேவரையும் வெட்டினார்கள் என்றும் அதை நான் பார்த்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதலில் கண் கண்ட சாட்சி இல்லாததால் எங்களை சாட்சியாக போடவேண்டும் என்பதால் புகார் மதியம் 3.00 மணிக்கு மேல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் காவல்நிலையம் செல்லவும் இல்லை என்றாலும், என் அண்ணன் வாக்குமூலம் கொடுத்ததில் நான் கையெழுத்து போட்டேன் என்றுசொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று இறந்தவரின் சடலத்தை சாத்தான்குளம் மருத்துவமனைக்கு 9.00 மணிக்கே கொண்டு வந்துவிட்டார்கள் என்றும், அதன்பின்பு சம்பவம் கேள்விப்பட்டு நாங்கள் நேரடியாக சாத்தான்குளம் காவல்நிலையம்தான் வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்தோம். இறந்தவர்களிடம் போன் இருந்ததா என்றால் இருந்தது. அன்றையதினம் போலீசார் அந்த இடத்தில் கிடந்த 2 போன்கள் பற்றி என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவ சமயம் நாங்கள் வந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப பகையை வைத்து எதிரியை பழிவாங்குவதற்காக அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கி நடந்த கொலையை மறைத்து உண்மைக்கு புறம்பாக முன்விரோதத்தின்காரணமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 2 நாட்களுக்கு முன்பு ஊருக்கு வந்ததாகவும், அதை என் சகோதரர் கூப்பிட்டு கண்டித்ததாகவும் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்துமட்டும் 25ம்தேதி 3.00 மணிக்கு மேல் கையெழுத்து வாங்கி புகார் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.